பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 02 2025 **WEDNESDAY** 12 40 **PM**

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சுயசார்பு மற்றும் வளர்ச்சிக்கான பாரதத்தை கட்டமைக்க சத்ரபதி சிவாஜியின் வரலாறு வழிகாட்டியாக அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கான திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. கடந்த ஆண்டு மழை வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட ஐந்து மாநிலங்களுக்கு ஆயிரத்து 554 கோடி ரூபாய் கூடுதல் நிதியை விடுவிக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

4. புதிய தலைமை தேர்தல் ஆணையராக திரு. ஞானேஷ்குமார் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

5. புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று ஆடவர் பிரிவில், ஜெர்மனியையும், மகளிர் பிரிவில் ஸ்பெயினையும் எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று முழக்கமிட்ட மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியின் 395-வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில், நாட்டின் சுயராஜ்ய கொள்கைக்கு அடித்தளமிட்டவர் வீர சிவாஜி என்று குறிப்பிட்டுள்ளார்.

வீரத்திற்கும், தலைமைப் பண்புக்கும் இலக்கணமாக திகழ்ந்த சத்ரபதி சிவாஜியின் அரிய பண்புகள் வருங்கால சமுதாயத்தினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சுயசார்பு மற்றும் வளர்ச்சிக்கான பாரதத்தை வலுவாக கட்டமைக்க இளைய சமுதாயத்தினருக்கு சத்ரபதி வீர சிவாஜியின் வாழ்க்கை வரலாறு வழிகாட்டியாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நாளில் சத்ரபதி சிவாஜிக்கு தமது வீர வணக்கத்தை தெரிவிப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சத்ரபதி சிவாஜியின் பிறந்தநாளையொட்டி புனேயில் நடைபெற்ற பாதயாத்திரை நிகழ்ச்சியில், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டார்.

மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் புனே மாவட்ட நிர்வாகமும் இணைந்து இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன.

அப்போது பேசிய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, சுயராஜ்ய சிந்தனைக்கும், சிறந்த அரசு நிர்வாகத்திற்கும் அடித்தளமிட்டவர் சத்ரபதி சிவாஜி என்று குறிப்பிட்டார்.

பெண்கள் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்தவர் என்றும் அவர் கூறினார்.

சத்ரபதி சிவாஜியின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, அவர் வழியில் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வருவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மகாராஷ்ட்டிர முதலமைச்சர் திரு. தேவந்திர ஃபட்னவிஸ், மாமன்னர் சிவாஜி எழுப்பிய 12 கோட்டைகளை யுனெஸ்கோவின் புராதன சின்னமாக அறிவிக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி எடுத்து வரும் முயற்சியை வரவேற்பதாக கூறினார்.

சத்ரபதி சிவாஜியின் பிறந்தநாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில் வீரத்திற்கும் வலிமைக்கும் தைரியத்திற்கும் பெயர்பெற்ற சத்ரபதி வீர சிவாஜியின் நிர்வாகத்திறமை, தலைமைப்பண்பு, போர் அணுகுமுறை ஆகியவை என்றும் நினைவுகூரத்தக்கவை என்று கூறியுள்ளார்.

சாதிமத பேதமின்றி அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காகவும் பாடுபட்ட சத்ரபதி வீரசிவாஜியின் பிறந்த நாளில் அவருக்கு தமது வணக்கத்தை தெரிவிப்பதாகவும் திரு. எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று 77வது ஆப்பிரிக்க – ஆசிய ஊரக மேம்பாட்டு அமைப்பின் செயற்குழு கூட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் பல திட்டங்களை இந்த அமைப்பின் மூலம் ஆப்பிரிக்க நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

கிராமப்புற மக்களின் மேம்பாட்டுக்கான உதவிகளை இந்தியா தாராளமாக அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதமரின் கிராம சாலைகள் திட்டம், அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கம், பெண்களை லட்சாதிபதியாக்கும் திட்டம் போன்றவை இந்தியாவின் கிராமப்புற வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கடந்த ஆண்டு மழை வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட ஐந்து மாநிலங்களுக்கு ஆயிரத்து 554 கோடி ரூபாய் கூடுதல் நிதியை விடுவிக்க மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையிலான உயர்மட்டக் குழு அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆந்திரப் பிரதேசத்திற்கு 608 கோடி ரூபாயும், நாகாலாந்திற்கு 170 கோடி ரூபாயும், ஒடிசாவிற்கு 255 கோடி ரூபாயும், தெலங்கானாவிற்கு 231 கோடி ரூபாயும், திரிபுராவுக்கு 288 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் நிவாரண நிதியாக இந்த தொகை பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது.

மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024-25ஆம் நிதியாண்டில் 27 மாநிலங்களுக்கு, மாநில பேரிடர் நிவாரண நிதியாக 18 ஆயிரத்து 322 கோடி ரூபாயும், தேசிய பேரிடர் நிவாரண நிதியாக 18 மாநிலங்களுக்கு 4 ஆயிரத்து 808 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

புதிய தலைமை தேர்தல் ஆணையராக திரு. ஞானேஷ்குமார் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

புதுதில்லியில் தேர்தல் ஆணையர் அலுவலகத்தில் பதவியேற்ற பின் அவர் விடுத்துள்ள செய்தியில், நாட்டில் 18 வயது நிரம்பிய அனைவரையும் வாக்களிக்கச் செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் தாம் எடுக்கப் போவதாக கூறியுள்ளார்.

அரசியல் சாசன மாண்பின் அடிப்படையிலும், நாட்டின் தேர்தல் சட்டங்கள், விதிமுறைகள் அடிப்படையிலும் வாக்காளர்களுக்கு ஆதரவாக தேர்தல் ஆணையம் தொடர்ந்து செயல்படும் என்றும் திரு. ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையராக திரு விவேக் ஜோஷியும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

<<<<<<>>>>>>

தமிழ் தாத்தா உ வே சாமிநாத ஐயரின் 171-வது பிறந்த நாள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நளாக இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், தமிழ்மொழியின் இலக்கிய வளத்தை மீட்டெடுத்த மாபெரும் தமிழறிஞர் அவர் என்றும், பழம்பெரும் இலக்கியங்கள் மற்றும் இலக்கணக் குறிப்புகளை பிழையின்றி தொகுத்து உரை எழுதிய சிறப்புக்குரியவர் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழிக்கு அவர் ஆற்றிய அரும்பணியை நினைவுகூர்ந்து இந்நாளில் போற்றுவோம் என்றும் அமைச்சர் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நாளையொட்டி சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் உள்ள அன்னாரது சிலைக்கு கீழே வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாநில அமைச்சர்கள் திரு தங்கம் தென்னரசு, திரு மு பெ சாமிநாதன் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் சென்னையில் பல்வேறு இடங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று வழங்கினார்.

சென்னை, புளியந்தோப்பில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பேசிய அவர், நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டித் தருவதற்கான பணிகளுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - மு.க.ஸ்டாலின் 44 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

ஐ.நா பாதுகாப்பு சபை சீர்திருத்தங்களுக்கு உலக நாடுகளிடையே விரிவான கருத்தொற்றுமையை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. ஆன்டனியோ குட்ரஸ் தெரிவித்துள்ளார்.

பன்முகத் தன்மை மற்றும் உலக நாடுகளின் நிர்வாக சீர்திருத்தம் குறித்த கூட்டத்தில் உரையாற்றிய அவர், இன்றைய பூகோள அரசியலில் உண்மைகளை வெளிப்படுத்தும் விதமாக பாதுகாப்பு கவுன்சிலின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

அரசுகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகளுக்கு இதர நாடுகளின் ஆதரவு கிடைக்கப் பெறாத நிலையில், அதனை கைவிடும் சூழ்நிலை கடந்த 16 ஆண்டுகளில் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா பாதுகாப்பு சபையில் இடம்பெறுவது குறித்த விஷயத்தில் சீனா சில குறிப்பிட்ட சீர்திருத்தங்களுக்கு மட்டுமே ஆதரவு அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவையும், ஜப்பானையும் பாதுகாப்பு கவுன்சிலில் சேர்ப்பதற்கு அந்நாடு எதிர்ப்பு தெரிவித்து வருவதையும் திரு. ஆன்டனியோ குட்ரஸ் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆடவர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

புவனேஷ்வரில் இப்போட்டி மாலை மணி 5.15-க்கு தொடங்குகிறது.

இரவு மணி 7.30-க்கு நடைபெறும் மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா - ஸ்பெயின் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி – உத்திரபிரதேச அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>>

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

கராச்சியில் நடைபெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியுசிலாந்து அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

கத்தார் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – போர்ச்சுக்கலின் **Nuno Borges** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<>>>>>>

ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டி சீனாவின் **Shenzhen** நகரில் இன்று தொடங்கியது.

<<<<<<>>>>>>

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Diva Bhatia -** கிரீஸின் **Sapfo** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**